Reg. No. M. 2997.

தனிப்பிரதி 1 அணா

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

# VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.— குறள்.

VOL, I. { புதுவை, ஸ்ரீமுகஹ தை மீ ௧௨ உ (25—1—34) } No. 9

## திருமந்திரம்

போற்றியென் றேனெந்தை பொன்னுன சேவடி
யேற்றியே சென்று மேறிமணி தானகக்
காற்றின் விளக்கது காய மயக்குறு
மாற்றவுங் கேட்டது மன்றுகண் டேனே.

பதமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட்
டிதமுற்ற பார விருளைத் துரந்து
மதமற் றெனதியான் மாற்றிவிட் டாங்கே
திதமுற் றவர்கள் சிவசித்தர் தாமே.

சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன்
சுத்தாசுத் தத்துடன் றேய்ந்துந்தோ யாதவர்
முத்தரம் முத்திக்கு மூலத்தர் மூலத்துச்
சத்தர் சதாசிவத் தன்மையர் தாமே-

உ
திருவருள் துணை.

காலமுண்டாகவே காதல்
செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண்டானெங்கள் பாண்டிப்
பிரான்தன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்கு
கின்றான்வந்து முந்துமினே.
(திருவாசகம்.)

# வித்தகம்

புதுவை,
ஸ்ரீ முக தை மீ 12உ

## திருவருணுட்டம்

உலகத்திலே சீவர்கள் கல்வி செல்வம் அதிகாரம் சரீர வலிமை முதலியவற்றால் எத்துணைப் பெரிய வல்லபம் படைத்தவர்களாயினும் மனச்சஞ்சலமின்றி வாழ்தல் அரிதினும் அரிதாம். முன்னிலைகளால் இடர்ப்பட்டு அவச்சலனம் அடைந்து ஆகாமியங்களை ஈட்டாதிருத்தல் முடியாத காரியமே. மேலைத் தேச விஞ்ஞானிகள் (Western (Philosophers) எனப் புகழப்பட்டோர் பலர் அற்ப காரியங்களுக்கும் முன்னிலைகளால் அவச்சலனமடைந்து அசுரத்தன்மை மேற்கொண்டு பழி பாவங்களைத் தேடியமைக்குப் பல சான்றுகள் உண்டு. "Scratch the Philosopher you will find the savage." என்பது பிரசித்தமான ஒரு ஆங்கில பழமொழியாகும். உபாசனை யாளராய்ப் பல மருட்புதுமைகளை உஞற்றினவர் எனப் புகழப்பட்டவரும், பெரும் புலவரெனப் பலராலும் மதிக்கப்பட்டவரும் திருவருணுட்டம் வகித்து முன்னிலைகளை உறவுபடுத்தி உய்தியடைய அறியாது மாண்டுபோயினமை அவரவர் வாக்குக்களாலும் சரித்திரங்களாலும் அறியக்கிடக்கின்றது. எத்துணைப் பெரிய கல்வியுடையரேயாயினும் சக்கிரவர்த்தியேயெனினும் உண்மையை உணர்ந்து திருவருளை நாடும் பக்குவம் அமையப் பெறாராயின், அவர் சஞ்சலமின்றி வாழ்தல் முற்றாக அசாத்தியமே என்பது ஒருவராலும் மறுக்க முடியாதது. இவரெல்லாம் இயற்கையின் திறன் அறிந்து ஒப்புரவொழுகும் திறனறியாது இடர்ப்படுகின்றார் என்பது வெள்ளிடை. திருவருட் செயலை எட்டுணையும் உணராது "நான்" என்னும் அக்கிரமமான பாவனையால் — தற்சுதந்திரத்தால் சாங்கோபாங்கமாகப் பலவித சங்கற்பங்களை உளவாக்கி அவதியுறுவது சீவ சுபாவம். இவ்வாறு உலகப்பற்று சரீரபாவனை என்பன நீங்கும் நெறியறியாது அவதியுறுவோரே அகக்கண் புதைந்த குருடராவர். இன்னவர் இயல்பை நோக்கியே,

உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
எண்பதுகோடி நினைந்தெண்ணுவன — [கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின்கலம் [போலச்
சாந்துணையுஞ் சஞ்சலமே தான்.

என்று அருளிச்செய்தார் ஔவைப் பிராட்டியார். உலகியலறிந்து ஒப்புரவொழுகும் புண்ணியமுடையோர் திருவருணுட்டம் வழுவற வகித்து உய்தி யடைவர்.

திருவருணுட்டம் என்பது "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்னும் பெரியார் திருவாக்கின்படி யாவற்றையும் அசைத்து நிற்கும்— நடாத்திக்கொண்டு நிற்கும் இறைவன் திருவருளை உள்ளும் புறம்பும் ஓவாது கண்டு தற்சுதந்தரம் அற்று வாளாங்கு வதிதலாகும். உந்நதமாகிய இச்சரீரத்தையும் இவ்வுலகையும் இதன்கண் உள்ள பொருள்களையும் இறைவன் சீவர்களுக்குக் கொடுத்த காரணம் யாதென ஆராயுமிடத்து அச்சீவர்கள் அவ்வவற்றால் அறிவு விளக்கம் பெற்று உண்மை கடைப்பிடித்து இறைவனது அருள் விளையாட்டைத் தங்கள் உள்ளும் புறம்பும் ஓவாது கண்டு தற்சுதந்தரமற்றுத் திருவருளுக்குத் தம்முடலுயிரை முற்றும் உணவாக்கி உய்தியடைந்து மீண்டு வாரா உண்மை நிலையை அடைதற் பொருட்டேயாம். திருவருணுட்டம் வகித்துச் சும்மா இருத்தல் என்பது செயற்கரும் செயலாகும். இது பெரியார்க்கே உரியது; ஏனையோர் சிந்தனைக்கும் எட்டாதது.

விழித்திருந்துள்ளக் கருத்தினை யிழந் [தேன்.

என மணிவாசகப் பிரபுவே அருளிச் செய்தனர் என்றால், உலக மாக்களைப் பற்றிப் பேசவும் வேண்டுமா?

திருவருணுட்டம் விழைவோன் உலகிய லறிந்து அதனைத் தன்னிலையில் ஒப்ப அமைப்பது முக்கிய கடன். உலகமே உணர்ச்சி மயமாய் விளங்குகின்றது. சரீரமும் அத்தன்மைத்தே. உணர்ச்சியே சிவம்.

### ஔவை குறள்

### உடம்பின் பயன்

உணர்வாவ தெல்லா முடம்பின் பயனே
யுணர்க வுணர் வுடையார்............2.
உடம்பினு லன்றி யுணர்வுதா னில்லை
யுடம்பினு லுன்னியதே யாம்.........5.

நான் என்பதும் இயற்கை. அறியாமையும் இயற்கை. ஆதலால் யான்

எனது என்னும் அக்கிரமமான பாவனையை விட்டு உணர்ச்சி மயமாய் நிற்றல் வேண்டும். உலகியலை இயற்கை என அறியாது உலகம் நமது எண்ணப்படியே நடக்கவேண்டும் என்று முயன்று சுயநலம் கருதி அவதியுறுதல் அறியாமையின் பயனே. உலகியல் அறியாது நாமாகவே சங்கற்பங்களைச் செய்து அவச்சலன மடைந்து முன்னிலைகளிற் சீற்றங்கொண்டு ஆகாமியங்களைக்குவியல் குவியலாகஈட்டி இடர்ப்படுகின்றோம். உலகியலை மாற்ற நம்மால் முடியுமா? முடியாது. ஒவ்வொருவர் சிந்தனை சொற் செயல்களும் அவரவர் இருவினைப் பயனாலாய அறிவின்படியே அமையும். இதற்கு மாறாக எழுந்து உலகியலை மாற்ற முயல்வது அறியாமை அன்றோ! மாயையை அடிப்படுத்தும் வல்லபம் பெறாது அம்மாயைக்கு அடிமைப்பட்டு அம்மாயையில் மயங்கி இடர்ப்படும் நாம் அம்மாயாகாரியங்கள் நம் எண்ணப்படியே நடக்க வேண்டுமென முனைப்போடு முயன்றால் அம் முயற்சி ஒரு சிறிதாவது பயன்தருமா? உலகியலுக்கு நாம் மாறுபடுதலால் — முன்னிலையோடு பகைகொண்டு நிற்றலால், தன்னிலை அவச்சலனம் அடைகின்றது—அவதியுறுகின்றது. இதனால் நாம் கோபம் முதலிய குணங்கட்கு ஆளாகிக் கெட்டுப்போகின்றோம்.

ஈசுரன் உலகத்தைச் சிருட்டித்துச் சம்மாரம் செய்வதற்குக் காமம் முதலிய தீய குணங்களைத் தனக்கு ஆயுதங்களாகக் கொண்டனன். சீவர்கள் இவற்றைத் தங்கள் ஆயுதங்கள் என்று அறியாமையால் நினைத்து இவற்றைக் களவாண்டது மல்லாமல் இவற்றை சமயோசிதமாக உபயோகிக்கும் ஆற்றல்—பழக்கம் இல்லாதவர்களாதலால் இவற்றால் தங்களைத் தாங்களே கொலைசெய்து கொள்கின்றனர். இவ்வாறான அநர்த்தங்கள் "நான்" என்கின்ற அக்கிரமமான பாவனையாகிய தற் சுதந்தரத்தால் உண்டாகின்றன. முன்னிலைகளை இயற்கை என்று உணராது அவற்றில் நமது குருட்டுப் பார்வையைச் செலுத்தி இடர்ப்படுகின்றோம். முன்னிலைச் சுட்டு என்னும் தடிப்பினால் சங்கற்பங்களைச் சாங்கோபாங்கமாக விருத்தி செய்து அவதிப்படுகின்றோம். இதனால்மனமொழி மெய்கள் வசப்படாது ஆகாமியங்களை ஈட்டுகின்றோம். தம் எண்ணப்படியே பிறர் ஒழுக வேண்டும் எனவும் தமது நன்மைக்காகவே பிறர் உயிர்வாழ்தல் வேண்டும் எனவும் சங்கற்பஞ்செய்து அவை கைகூடுமாறு பிறர் பால் ஒவ்வோர் காரணம் கற்பித்துக் கொண்டு ஓவாது முயலும் சீவான்மாக்களே நாம் என்பது உண்மையன்றோ? அறியாமை உருவமாகிய இவ்வுலகில் இது வியப்பன்று. இதுவே சீவ சுபாவம். சீவர்கள் பிறர் ஆக்கம் கண்டு பொறுக்கமாட்டார்கள். தமக்கு வரும் துன்பங்களையும் பொறுக்கமாட்டார்கள். தம் எண்ணப்படி பிறர் ஒழுகாத வழியும் பொறுக்கமாட்டார்கள். பிறர்க்கு எக்காலத்தும் எவ்வாற்றானும் தீமையே சூழ்வார்கள். இப்படியான முன்னிலைக் கோரணிகளால் இடர்ப்பட்ட பெரியோர்கள், உண்மையை அநுபவமாக உணர்ந்து, இக் கோரணிகளுக்கு மருந்து தேட முடியாது என்றே அஃதாவது இம் முன்னிலைகளை அவைகள் தீய சுபாவத்தினின்றும் நீக்க முடியது என்றே—இது உலகியல் எனத் துணிந்து "எல்லாம் சிவன் செயல் என்று இரு மனமே" என அமைந்து திருவருட்கவசத்தை இட்டுக்கொண்டனர். முன்னிலைக்கோரணிகளைப் பொருட் பண்ணாது யாவும் திருவருட் செயல் எனத் தெளிவதேயன்றி அவற்றைப் பொருட் பண்ணி அவதியுறுதல் உய்யும் திறன் ஆகாது என்க. இது சொல்வதற்கு எளிதேயன்றிச் செய்வதற்கோ மிக அரியது. பின் வரும் அப்பர் திருவாக்கும் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்தும்:

நமச்சிவாய வென்பாருளரேலவர்
தமச்ச நீங்கத் தவநெறிசார்தலால்
அமைத்துக்கொண்டதோர் வாழ்க்கையனாகிலும்
இமைத்து நிற்பது சால அரியதே.

திருவருட் கவசத்தின்முன் முன்னிலைக்கோரணிகள் பயனற்றனவாகும்.

ஆன நீற்றுக்கவசம் அடையப்புகுமின் [கள்
வானவூர் கொள்வோம் நாம் மாயப்படை [வாராமே.

எனமணிவாசகர் அருளியதும் அறிக. இப் பெரியார் ஒழுக்கத்தையே நாமும் பின்பற்ற வேண்டும். அப்பொழுதுதான் ஆண்டவன் நம்மை அடிமை என்பான். வேண்டியவெல்லாம் நமக்குத் தருவான். திருவருளாட்டம் வழுவற வகித்து அவன் அடியைப் பற்றினவருக்கு எவ்வகையான போசமும் உண்டு. இவ்இடத்தை அடைந்தவனை அஃதாவது திரு அடியின் ஆதியைப் பற்றினவனை அம்பிகை தன்கருணை நிறைந்த விழியால் நோக்கிக் கூறுவது பின் வருவது:

## திருமந்திரம்

நடந்திடும் பாரினில் நன்மைக ளெல்லாம்
கடந்திடும் காலனு மெண்ணிய நாளும்
படர்ந்திடு நாமமும் பாய்கதிர் போல
அடைந்திடு வண்ண மடைந்திடு நீயே. 8.

அடைந்திடும் பொன்வெள்ளி கல்லுட
னெல்லாம்
அடைந்திடு மாதி யருளும் திருவும்
அடைந்திடு மண்டத் தமரர்கள் வாழ்வும்
அடைந்திடும் வண்ணம் அறிந்திடு நீயே. 9.

(ஷை நவாக்கரி சக்கரம்)

உண்மையை உணர்ந்து, மெய்யடியார் ஒழுக்கத்தை நாமும்பின் பற்றினாற்றான் ஆண்டவன் நம்மை அடிமை என்பான். ஆண்டவனிடத்து அடிமை எவ்வாறு நடக்க வேண்டுமோ அவ்வாறு நடந்தால் ஒழிய அவன் கருணையைப் பெற முடியுமா? முடியாது. ஒருவன் எதை எதை விளைத்தனனோ அதனதன் பயனே முன்னிலையன்றி வேறு முன்னிலை இல்லை. முன்னிலைச் சுட்டு—குருட்டுப் பார்வை ஒழிய முன்னிலை யாவும் தன்னிலைப் படும். ஒருவன் நம்மை இகழுங்கால் அவ் இகழ்ச்சிக்குக் காரணம் எவ்வாற்றா

னும் நம்பால் உள்ளது என்று கருத வேண்டியதே முறை. தீய அசைவுகள்—தீய செயல்கள்—தீய குணங்கள் நம்மாட்டு இல்லையாயின் அவை முன்னிலைக் கோரணிகளாகத் தோன்றி நம்மைப் பரிசிக்க ஏதுவில்லை. இவ்வுண்மைகளை அறியாது முன்னிலைக் கோரணிகளில் மனதைச்செலுத்தி அவச்சலனமடைதலால் கோபம்காமம் முதலிய வற்றுக்குக் காரணமான அசுத்த நிறை அதிகரிக்கின்றது. சுத்த நிறை நீங்குகின்றது. சுத்த நிறை அணு அணுவாக நீங்குதலால் சரீரம் பிணி மூப்புக்களால் தளர்ந்து சாதல் ஏற்படுகின்றது. சகிப்பு என்பது திருவருணட்டம் வகிப்பதற்கு முக்கியமான தந்திரம். சகிப்புடையவரே—பொறுமை யுடையவரே திருவருணட்டம் வகித்தற்கு அருகராவர். பின் வரும் தேவர் வாக்கும் இவ் வுண்மையை நன்கு புலப்படுத்தும்:

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி ஒழுகப்படும்.

இ-ள்) நிறையுடைமை நீங்காமை வேண்டில்—நித்திய நிறையாகிய அமல நிறை அணு அணுவாக நீங்காது தன்மாட்டு ஆக்க முறுதலை ஒருவன் விரும்புவானாயின்; பொறையுடைமை போற்றி ஒழுகப்படும்—முன்னிலையான் வரும் துன்பங்களைத் திருவருட் செயலாகக் கண்டு பொறுத்தலை இன்றியமையாத ஒழுக்கமாகக் கொண்டு ஓம்புதல் வேண்டற்பாலது. முன்னிலைகளான் வருங் கஷ்டங்களைப் பொறுக்க முடியாதவரே பொருமையுடைவர் — அழுக்காறுடையவர் — அழுக்கு நெறியிற்செல்பவர். பொறையின்மையே நடு நிலைமை யின்மையாகும். இதனுல் நிறை தவறுகின்றது. நிறை தவறில் காலன். நிறை யொத்தால்—சமம் பெற்றால் காலன் மூலன் ஆகின்றான். பின் வரும் திருவாக்கும் இவ் வுண்மையையே உணர்த்தி நின்றது.

## அப்பர் தேவாரம்

தனித் – திருநேரிசை

நடுவிலாக்காலன்வந்து நணுகும்போதறிய [வொண்ணு
அடுவன வஞ்சுபூதமவை தனக்காற்றலா [கேன்
படுவன பலவுங்குற்றம் பாங்கிலா மனிதர் [வாழ்க்கை
கெடுவதிப் பிறவிசீசிகிளரொளிச் சடையினீரே. (10)

அமல நிறை ஆக்கமுறப் பெற்று நித்தியத்துவம் அடைய விரும்புவோர் பொறை யுடைமை போற்றி ஒழுகுதல் வேண்டும். பொறுத்தல் இன்றி முன்னிலைகளை ஒறுத்தலை மேற் கொள்வார் மாட்டுக் கோபம் முதலிய தீய குணங்கள் ஆக்கமுற்று அதற்குக் காரணமாகிய சாதலைத் தரும் அசுத்த நிறை அதிகரித்தல் கண்கூடு. பொறையுடைமையால் முன்னிலைகளை உறவு படுத்துதல் வேண்டும். பகையை நட்பாக்கிக்கொள்ளுதல்வேண்டும். முன்னிலைகளை நிறைகண்டு பஞ்சீகரணிக்காத விடத்து—உறவு படுத்தாத விடத்து உய்தியில்லை என்பதும்—வீடு பேறு இல்லை என்பதும் தத்துவப் பெரியார் துணிபும் வேதமுடிபுமாகும். முன்னிலைகளில் விருப்பும் வெறுப்பு மின்றி உலகியல் அறிந்து ஒப்புர வொழுகல் வேண்டும். அறியாமை மலிந்த முன்னிலைகளது அதிக்கிரமத்தைப் பொறுப்பதே சிறந்தமதிவைராக்கிய மாகும். பாரத வீரருள்ளே தரும புத்திரரை பொறையுடைமைக்குச் சிறந்த இலக்கியமாகப்பேசுவர். அன்னார் இப்பொறையுடைமையால் முன்னிலைகளை நிறைகண்டு பஞ்சீகரணித்து நிறையுடையராய் அஃதாவதுதமது தூலத்துள் விளங்கும் அமல மூலையை விளைவேற்றி உண்மை நிலையடைந்தார்—நித்தியத்துவம் அடைந்தார் என்பதற்கு "தருமர் பச்சைக் கூட்டோடு கயிலாயம் போனார்" என்னும் உலகப் பிரசித்தியான சம்பவமே உறு சான்றாகும். பச்சைக்கூடு என்பது யாது? கயிலாயம் எங்குள்ளது? என்பதனை ஆராயவல்லார்க்கு தருமர் தூலத்தோடு மறைந்து உண்மைச் சைவ முத்தியடைந்தார் என்பது நன்கு புலப்படும். தூலத்துள்ள அமல மூலையை—திவலையாயிருக்கும் அகண்டாகார அமல சொரூபத்தை விளைவேற்ற வேண்டியதே உய்யும் நெறி என்பதும் தூல உடலின் அருமை பெருமையும் பின் வருவனவற்றால் நன்கு புலப்படும்:

## அப்பர் தேவாரம்

தாயத்தார் தமர் நன்னிதி யென்னுமிம்
மாயத்தே கிடந்திட்டு மயங்கிடேல்
காயத்தேயுளன் கானூர்முளையினை
வாயத்தால் வணங்கீர் வினைமாயவே.

(திருக்கானூர் திருக்குறுந்தொகை 3.)

பிறப்பு மூப்புப் பெரும்பசிவான் பிணி
இறப்பு நீங்கியிங்கின்பம் வந்தெய்திடும்
சிறப்பர் சேறையுட் செந்நெறியான் கழல்
மறப்பதின்றி மனத்தினுள் வைக்கவே.

(திருச்சேறை திருக்குறுந்தொகை. 3.)

## ஔவை குறள்

உடம்பின் பயன்

உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினி லுத்தமனைக் காண்.........(1)

மாசற்ற கொள்கை மனத்தி லடைந்தக்கால்
ஈசனைக் காட்டு முடம்பு...............(3)

உயிர்க்குறுதி யெல்லா முடம்பின் பயனே
அயிர்ப்பின்றி யாதியை நாடு............(8)

உடம்பினாற் பெற்ற பயனாவ தெல்லாம்
திடம்பட வீசனைத் தேடு...............(9)

## சூத சங்கிதை

சாமசாகோப நிடத தாற்பரியம்

எக்கிய காண்டம் உத்தர பாகம்

பிரம கீதை

ஆதலாற் போகமோக்க மடைதக வெண் [ணினோர்கள்
காதல்செயுடல்க டெய்வமயமெனக் கருத் [தினேர்க்து
தீதமையூறு செய்யாது வப்புறச்செய்ய [வேண்டும்
மேதக வுணர்ந்துகொண்மின் மெய்த்தவம் [பூண்டுநின்றீர்.

ஒருவனுக்குக் கல்வி செல்வம் அதிகாரம் சரீர பலம் (அசுத்த பௌதிக

பலம்) என்பனவற்றால் வரும் வலிமையினும் அறியாமையுடைய முன்னிலைகளால் நேரும் அதிக்கிரமங்களைப் பொறுக்கும் வலிமையே மிகச் சிறந்ததாகும். பின்வரும் தேவர் வாக்கும் இதனை நன்கு புலப்படுத்தும்.

**இன்மையுளின்மை விருந்தொரால் வன்மையுள்**
**வன்மை மடவார்ப் பொறை.**

(இ-ள்) இன்மையுள் இன்மை விருந்து ஓரால்—ஒருவனுக்கு வறுமையுள் வறுமையாவது தன் சரீர இயல் பறிந்து நிறையறிந்து இனமறிந்து உண்ண வேண்டிய—உண்ணும் உணவுகளை அலட்சியம் செய்வது, வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை—அதுபோல வலிமையுள் வலிமையாவது அறியாமையுடைய முன்னிலைகள் செய்யும் துன்பங்களைப் பொறுத்தல் என்பது. அமல நிறை ஆக்கமுறுமாறு தன் சரீர இயல் பறிந்து உண்ணும் வகை அறியாது கண்டதையெல்லாம்—இச்சைப்பட்டதை யெல்லாம் உண்டு சாதலடைபவனே வறியருள் வறியவன். மடவார்ப் பொறுப்பவனே வலியவருள்வலியவன். ஏன்? நாவினால் சுட்ட வடு உள்ளாறாது மனதை வருத்தி அவச்சலனமடைவித்தலால், தீயினாற்சுட்ட வடுவைப் பொறுப்பவனினும் நாவினால் சுட்ட வடுவைப் பொறுப்பவன் மிக்க மதிவைராக்கியமுடையனாதலால் என்பது. இனமறிந்து நிறையறிந்து முன்னிலைகளைப் பஞ்சீகரணித்து அருந்துதற் கேற்ற ஆற்றல் — செல்வம் இல்லாதவனே வறியருள் வறியவன். இத்தன்மையுடைவரையே "துவ்வாதவர்" என்றும், பொறுமை இன்றி நிறை கடந்தவரையே "இறந்தார்" எனவும் கூறினார் தேவர். பின் வரும் அன்னவர் திருவாக்குக்களையும் நோக்குக :—

## குறள்

**துறந்தாரிற்றூய்மையுடையர்இறந்தார்வாய்**
**இன்னாச் சொன் னோற்கிற் பவர்.**

**இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்**
**துறந்தார் துறந்தார் துணை.**

முன்னிலைக் கோரணிகளுக்குத் தப்பிப் பிழைக்க வேண்டுமானால் "செத்தாரைப் போலே திரி" என்றார் பட்டினத்தடிகள். உலகியலறிந்து அதனைத் தன்னிலையில் ஒப்ப அமைப்பதும் "செத்தாரைப் போலே திரி" வதும் அஃதாவது பொறையுடைமை போற்றி ஒழுகி முனைப்பின்றி வாளா இருத்தலும் இருவினையைச் சமம் செய்யும் கருவிகளுள் முக்கியமானவை. திருவருணாட்டம் அமைதற்குப் பொறையுடைமை — சகிப்பு இன்றியமையாதது என்பது இதுகாறும் கூறியவைகளால் நன்கு புலப்படும்.

முன்னிலை தன்னிலைகள் ஒன்றுதலே உண்மைச் சிவ பூசை—சந்தி வந்தனம். முன்னிலையே குரு—ஆண்டான். தன்னிலை—அடிமை. முன்னிலை தன்னிலை, ரவி மதி, அண்டம் பிண்டம், விதி மதி, அங்கம் லிங்கம், பதி பசு, சிவம் சத்தி, ஆண் பெண், விந்து நாதம், கோசம் பீசம், உடல் உயிர், காரம் சாரம், உப்பு புளி, சத்து சித்து லிங்கம் யோனி, சுக்கிலம் சுரோணிதம், ரஸம் கெந்தகம், என்பன ஒன்றே. இவை சித்தர் பரிபாஷை. முன்னிலை என்பதன் இருப்பு ஒழியாத வரை கஷ்டம் நம்மை விட்டு அகலாது. ஆதலால் முன்னிலைகளால் வரும் அசைவுகளை — வினைகளைப் பொருட் படுத்தாது — அவைகளைத் துச்சமென நினையாது அவைகளால் வரும் இன்பதுன்பங்களைத்திருவருட் செயலாக மதித்து உய்தி அடையவேண்டும். மெய்யடியார் என வதிந்த எம்பெருமக்களுள்ளேதுன்பம் அடையாமல் அடிமையானவர் உளரோ? அன்னவர் அடைந்த துன்பங்கள் உலகமாக்கள் சிந்தனை சொற் செயல்களுக்கு அளவுபடுவனவாகுமா? எம்பெருமான் அன்பர்களை அடிமைகொள்வது என்பதன் பொருள் என்னை? அன்பு செய்பவர்களது அவவினை என்னும் மாயையை முன்னிலை சொரூபமாக நின்று—விதியென்னும் தெய்வ ரூபமாக நின்று அகற்றி ஆட்கொள்ள வேண்டும் என்பதே அன்றி வேறு யாது? ஆதலால் அவ்வவர் வினையைக் கருணையினால் லேசமாக அநுபவிக்கச் செய்தும், அநுபவிக்காமல் அகற்றத்தக்கதை அக்கினி காரியம், விரதம், ஔஷதி இன்னோரன்ன பல உபாயங்களால் அகற்றச் செய்தும், அடிமை கொள்ளவேண்டும் என்பதன்றி வேறல்லவே. ஆதலால் அம்மாயையுடன் சேர்ந்தே, மாயா காரியங்களெனும் முன்னிலைகளைக் கொண்டே, விதிவினையாகிய அதனை திருவருணாட்டம் என்னும் புதுவினையை மேற்கொண்டு எந்தெந்த விதமாய்த் தனக்குள் சிக்கச்செய்யவேண்டுமோ அந்தந்த விதமாய் அதனோடு கலந்து அதனுட் புகுந்து அதனைத் தனக்குட் சிக்கச் செய்யவேண்டும். இவ்வாறு செய்வதே மாயையை அடிமை கொள்ளுவது-வெல்லுவது-உறவாக்குவது என்பனவற்றின் பொருளாகும். முன்னிலைகளே முன்னிலை வடிவமாகிய உலகமே நமக்குப் பகையென்பதும் ஆலகாலம் என்பதும் வெள்ளிடை. சரீரமும் அத்தன்மைத்தே. ஆதலால் பகையை நட்பாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

## குறள்.

**பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன்**
**தகைமைக்கட் டங்கிற் றுலகு.**

என்பது தேவர் வாக்கு. அன்பரை எவ் எவ்வகையாக ஒழுகச் செய்து அவர் வினைகளை எவ் எவ் விதமாக எவ் எக்காலத்து அறுக்கவேண்டுமோ அவ் அவ்வகையாக ஒழுகச் செய்து அவர் வினைகளை அறுத்து அவரைப் புனிதராக்கி ஆட்கொள்வதன்றோ கடவுள் அருள் என்பது. அவ்வகையாக அவ் வினையை நடாத்தி அதனைத் தமக்குட் சிக்கச்செய்ய அறியாதார்—துணியாதார் அன்பர் எனப்படுவரோ? சிவன் முத்தராதற் கேற்ற பக்குவமுடையாரை அளவிறந்த துன்பங்கள் சங்கேதமாய்க் கூடித்திரண்டு இடைவிடாது அலைக்கும் என்பது

# வித்தக வாழ்த்துப்பா

யாழ்ப்பாணம் வேலணையூர்
பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம்
அவர்கள் அளித்தது

பத்தியொடு முத்தி யடைந்தார்நெறி பலகாட்டி
பத்தியிலார் சித்த மலமதறுத்துச் செவ்வனே எ
முத்திநெறி நித்த முமருளுஞ்சீ ருடைப்புதுவை
வித்தகனே நித்த முநின்னுசிரிய ரொடுவாழி.

சத்தியம். ஏன்? எத்தனையோ சென்மங்களுக்குவித்துக்களாயிருக்கும் அவ்வினைகள் ஒரே சென்மத்தில் அநுபவமாக வந்து கழியவேண்டியவை யாதலால் என்க. திருவருணுட்டம் வழுவற வகித்து ஒழுகுவோர்க்கு அவ்வினைகள் லேசமான அநுபவமாய் வந்து கழியும். எமபெருமான் அன்பர்களது வினையைக் கருணையால் லேசமான அநுபவமாக நீக்காதொழியின், எத்தனையோ சென்மங்கட்கு வித்தாகிய அவ்வினைகள் ஒரே சென்மத்தில் அநுபவிக்கப்பட்டு ஒழியுமா? ஒழியாது என்பதைச் சொல்லவும் வேண்டுமா? ஆதலால் அம்மையப்பர் அருளை மறவாது—நன்றியை மறவாது ஒழுக வேண்டியது நமது கடன். அன்பர் வினையை ஊட்டிக் கழிக்குமுகத்தால் அவரை வருத்துவது—சோதிப்பது அவரை ஆட்கொள்ளுதற் பொருட்டேயன்றி அவரைக் கைவிடுதற் பொருட்டன்று. கைவிடுவதென்பது அப் பிரபுவுக்கு, அத் தாதாவுக்குத் தெரியாது. அவன் கருணையங் கடலன்றோ! அறவாழி அந்தணனன்றோ! எம்பெருமான் அருளால் இருவினையும் அநுபவித்து ஒழியவே இருவினை சொரூபமாகிய—வினைப் போக தேகமாகிய—பிராரத்த தேகமாகிய மருளுடம்பு சாதலுருச் சாதலடையும், அஃதாவது மாறுதலடையும். இவ்வாறு மாறப்பெற்றபின் — தூலம் அசுத்த நிறை நீங்கி அள்ளுருக்கையாய்ச் சூக்குமமாகி தானவனுகும் சமாதிகைகூடி "ஓ" வடிவமானபின், துவிசராகிய அச்சீவன் முத்தர் பார்ப்பவர் கண்களுக்குத் தூலமாகத் தோன்றினும் அவர் மாயையை அடிமை கொண்டவராதலால், ஊனங்கள் ஒன்று மின்றி நித்தியானந்தராய் வதிவர். பின்வரும் பிரமாணங்கள் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்தும்:—

### சூத சங்கிதை

#### முத்தி நிலை உரைத்த அத்தியாயம்

விரியுடலூழ் தய்த் தாகாமிய முருதொழித் [தெவர்க்குந்
திரிசியமாம் பவஞ்சந்தேய்ந்து சொப்பனம் [போற்றேன்ற
உரியவெம்பால் விழித்தோ ஞெருவனே [சீவன் முத்தன்
துரியமேல் விளங்கு நம்மைத் தோய்ந்த [வனவனென்றோர்தி. 32

#### சாம சாகோப நிடத தாற்பரிய முரைத்த அத்தியாயம்

முத்தனுனவன் மற்றோர் தமையெலா [முத்தரென்றே முன்னு நிற்ப
னுத்தம மெய்ஞ்ஞான சாதனமுளோன் [பிராரத்தமுளவரைக்கு
மெத்து பரமார்த்தஞானம் பேதஞான [மிவை மேவா நிற்பன்
பத்தமுறப் பிராரத்த நசித்தபின் றேன்
றுவ யாவும் பரமாய்த் தோன்றும். 10.

### சித்தாந்த சிகாமணி

#### ஆசார சம்பத்தித் தலம்

இலகுறு ஞானவங் கியினி விட்டயல்
விலகற வறுத்துள வினைவித் தோடுதா
நிலைவுறு தேகிபோ லமர்ந்த ஞானிமெய்
உலகின ருடவினை யொத்தி யங்குமால்.

இவ்வாறு சீவன் முத்தர் சூக்குமமாகிய "ஓ" வடிவத்தோடு உலக குரவராய்ச் சிலகாலம் உலகில் வதிந்து அச்சூக்குமமும் காலக்கிரமத்தில் அருளாகிக் கரைய அதனோடு உலகு கண்டு போற்ற மறைந்து உண்மை முத்தியடைவர்.

நாத விந்துக்கள்—முன்னிலை தன்னிலைகள் ஒன்றுதலே காலனை — காலனுகிய அசுத்த நிறையை அழிப்பதாகிய உண்மைச் சிவபூசை. முன்னிலை தன்னிலை இரண்டும் கூடும் நிறையால் நிறைக்கேற்ப ஏற்றம் இறக்கம் விளங்கும். இரண்டும் ஒன்றாய்க்கூடும் நாள் இரண்டும் இல்லை; இரண்டும் உண்டு. இரண்டும் கெட்டுப் பிறிதொன்றுகும். ஆகவே பாசம் இல்லாத நாள் பதி பசு வில்லை. முன்னிலை தன்னிலை இல்லை. துவிதமறறது. அங்கம் லிங்கம் இரண்டும் ஒன்றுகும்; அங்க லிங்க ஐக்கியம் — உண்மைச் சைவ முத்தி இதுவே யாம்.

இவ்வுண்மையை உணர்ந்து பணி செய்து கிடக்கும் திறன் அறியாதார் "நிஷ்காமியம் நிஷ்காமியம்" என வாய்ப் பறை யறைந்து திருவருளை மறந்து உலகியலை உணராதுமுன்னிலைகளைப் பொருட்படுத்தி முன்னிலைச் சுட்டு ஒழியப்பெருது முனைப்பு மேற்கொண்டு உலகியலுக்கு மாருகப் போராடி அவற்றை ஒழித்துவிட முயன்று சுயநல மேற்கொண்டு பிறர்க்குத்தீங்கு விளைத்து ஆகாமியங்களை ஈட்டுவர். உலகியலாகிய கற்பனைகளைக் கொண்டே உண்மையை நாடுவதன்றி, அவற்றை அறவே ஒழிக்க முயல்வதும், அவற்றை வெறுத்து ஒருபால் ஒதுங்குவதும் அவற்றையே உண்மை என நம்பி உழல்வதும் உய்யும் திறன் ஆகா என்க.

பகையாகிய — ஆலகாலமாகிய உலகத்துக்குள திர்சாயவேண்டும் அதற்கு மாறுபடின் ஆகாமிய வினை ஏறி அதனால் அசுத்த நிறை அதிகரித்து மரணம் பிறப்பு உளவாகும். எதிர் சாய்தலால் ஆக்கம் உளதாகும். மாறுபடு

## வடகோவை

சரவணபவானந்த உயர்தர வித்தியாசாலை,
"பிறிலிம்" (S. S. L. C.) வகுப்பு மாணவரும்
"கலாநிதிப் பாலியர் சங்க" வங்கத்தவருமாகிய
சோ. இரத்தினசபாபதி சர்மன் அவர்கள் வழங்கிய

### வாழ்த்துப்பா

(கட்டளைக் கலித்துறை)

விண்பாற் கரனென்று பெற்றது போலிரு மேதினியா
மண்பால் விரிஞா னவித்தக மென்னு மலர்கதிரா
லெண்பா லெவரு மஞான மதாகு மிருளகற்றிப்
பெண்பா தியுற்றான் கழற்க மலம்பெறும் பேற்றினரே.

தலால் கேடு உளதாகும். ஆக்கம் என்பது அமல நிறையாகிய சத்துவம் அங்குரம் பெற்று விளைவுறுதல் என்பதாம். கேடே ஆக்கமாக மாறும். ஆக்கமின்றி கேடில்லை, கேடின்றி ஆக்கமில்லை. இகலுக்கு எதிர் சாயாதொழியின் ஆக்கமும் கேடாம். இதனையே தேவர் பின்வரும் திருவாக்கால் கூறியருளினார்.

இகலிற் கெதிர்சாய் தலாக்கமதனை
மிகலூக்கி னூக்குமாங் கேடு.

(இ-ள்) இகலுக்கு எதிர்சாய்தல் ஆக்கம் = மாறுபாடான — பகையான உலகியலுக்கு மாறுபடாதிருத்தல் ஒருவனுக்கு ஆக்கமாகும், மிகல் ஊக்கின் கேடு ஊக்குமாம் = அவ்வாறன்றி அம்மாறுபாட்டின்கண் மிகுதலைமேற்கொள்வானாயின், கேடு மிகுதலை மேற்கொள்ளும் என்பதாம்.

மாறுபாடுடைய உலகத்துக்கு எதிர்சாய்தல் எனின் என்னை? அவ்வுலகியலைப் புறக்கணிக்க முடியுமா? உலகத்தைப்புறக்கணிப்பதென்பது ஒருவன் வானத்தை மறைக்கப் பந்தர் போட்டதை ஒக்கும். இத் தேவர் வாக்கு மிக ஆழ்ந்த கருத்தையும் அரிய பெரிய உண்மையையும் அடக்கிக் கொண்டிருக்கின்றது.

உலகியலைத் திருவருட் செயலாகக் கண்டு அவ்உலகியலாகிய முன்னிலைக்கு மாறுபட்டு ஒழுகுவது — அதனைப்

## உடம்பின் அருமை பெருமை

[7-வது வாரத்தொடர்ச்சி]

சரீரத்தின் அமைப்பும் அருமை பெருமையும் இன்ன இன்ன என வேதாகம புராணேதிகாசங்கள் முறையிடவும், தற்காலச் சைவர் பலர் அச்சரீரத்தை இழந்துவிடுவதே—அதனை அலட்சியம் செய்து பிணி மூப்புக்களால் பழுதடைந்து பிணமாகிப் புதைக்கப் படவும் சுடப் படவும் விட்டுவிடுவதே சாலச் சிறந்த முறை எனவும், அச்சரீரம் பிணமாகிக் கழிந்த பின் புறக்கணிப்பது — அதனை வெறுத்து ஒருபால் ஒதுங்குவது உய்புந் திறனாகாது என்க. ஆதலால் பொறையுடைமை போற்றி ஒழுகித் திருவருணாட்டம் என்னும் புதுவினையைக் கைக்கொண்டு வாளா கிடத்தலே பணி செய்து கிடத்தல் என்பது. இதனை எக்காலத்தும் மறவாது ஒழுகுதலே மெய்த்தொண்டர் இயல்பு என்பது வேதத்தால் வரையறுக்கப்பட்டது. இவ்வியல்புடைய மெய்யடியார்க்கு யாது இடையூறும் நேராது அவரை எம்பெருமான் தாங்குவது உண்மையினும் உண்மையே யாகும்.

இதுகாறும் கூறியவைகளால் திருவருணாட்டமே உண்மை நிலையடைதற்கு இன்றியமையாச் சாதகம் என்பதும் அதன் அருமை பெருமையும் பிறவும் ஒருவாறு உணரப்படும்.

சுபம்!

னேயே முத்தியுண்டு எனவும் பிரசாரமும் புரிந்து நூல்களும் எழுதிவெளியிடுகின்றனரே! இதன் கருத்து என்னையோ? தத்துவப் பெரியார் பாடல்களும் வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள் என்னும் நூல்களும் நுதலிய அரிய பெரிய உண்மைகள் எல்லாம் தற்காலச் சைவரால் ஒருசிறிதும் கண்டுபிடிக்கப் படாமையால், பலப்பல கோரணிச் செய்கைகளே அந்நூல்கள் நுதலிய அறத்தாறு என அவர் தாமே கற்பித்துக் கொண்டு அவப்பொழுதென்னும் வழிபாடுகளும் பிறபலவும் புரிந்து சாதலடைகின்றனர். தற்காலத்தில் வஞ்சக நாத்திகர்கள் —பேடிகள்—தஸ்யுக்கள்— விம்யுக்களே உலகில் நிறைந்துள்ளார்கள். உலகப் பற்றை ஒழித்தல்—சரீர அபிமானம் விடுதல் என்பதன் பொருளறியாது திகைத்து மாழ்கிச் சாதலடைவோர்க்கு வேதம் எது? வேதமாகிய ஆசான் எது? இவர்கட்குக் குரு இல்லை. குருவாகிய கடவுள் இல்லை. ஆயினும் இவர்கள் கடவுள் உண்டு என்று கூறுவார்கள். அவ்வாறு கூறுவது போலியேயன்றி வாய்மையன்று. நடிப்பேயன்றி உண்மையன்று. துன்பம் வரின் ஊழ் என்பார்கள். சுகம் வரின் தங்கள் திறமையைத் தாங்களே போற்றி மகிழ்வார்கள். நடைப் பிணங்களாகிய இவர்கள் —பிண நாற்றம் வீசும் அசுத்த பௌதிக யாக்கையையுடைய இவர்கள், பூமணம் கமழும் பொற்பூபதிகள் எனத் தங்கள் உடலை மாற்றி—மாறிப் பிறந்து சிவாச்சிரயத்தராய்—சிவப்பிரசாதமுடையோராய்உய்தியடைய வல்லராவாரா? உலகில் ஒழுங்காக உணவு கொள்ள—பௌதிக நிறையறிந்து அதற்கு ஏற்ப உணவு கொள்ள—அறிந்தவரே அரிதினும் அரிதாகும். சகல சீவராலும் அலட்சியம் பண்ணப்படும் அத்தியாயம் இது. உணவு என்னும் அத்தியாயமும் தற்காலத்தில் பாழ்பட்டு விட்டது. அமயம் நோக்குழி இது விரித்துக் கூறப்படும். ஆரோகண மதியுடைய தத்துவப் பெரியார் பாடல்களும் வித்துவான்கள் என்பவரால் போலிக் கொள்கைகளுக்கு ஏற்றவாறு அனர்த்தஞ் செய்யப்பட்டன—படுகின்றன.

தத்துவப் பெரியார் பாடல்கள் அனைத்தும் தற்காலத்தவர் உஞற்றும் வழிபாடுகளைத் தழுவியனவல்ல. ஆயினும் இவைகட்குப் பொருத்தமுடையன போலத் தோன்றுகின்றன. இதனாற்றான் மாயா

தேவியானவள் உண்மையைத் தன் குய்யத்தில் மறைத்துக் கொண்டு அகில சீவர்களையும் வஞ்சித்து மயக்கி விடுகிறாள். அடடா! இவளை அறியும் ஆற்றலுடைய ஒரு ஆண்பிள்ளை தற்காலத்தில் உண்டோ? இல்லை. இல்லை.

“தானென்ற வாலை யிவளுருவங் காணச்
சமர்த்துண்டோ வாண் பிள்ளை தானுமுண்டோ”

என்றார் கருவூராரும்.

இச்சரீரத்தின் அருமை பெருமையை மறந்தோ, இதனை அமலமாக்குதற் கேற்ற சாதகங்களை அறிந்து அநுட்டிப்பது முடியாத காரியம் எனத் துணிந்து அபிமான மேலீட்டினால் இவ்வுண்மையை வேண்டுமென மறைத்தோ பிற சமயங்கள் கூறுவது போலவே செத்த பின்பு முத்தியுளதாம் என்றும், யாதோ நிட்டையில் இருந்த பாவனையாக இறந்து விட்டால் மோட்சம் என்றும், உலகில் வதியுங் காலத்து உண்மைச் சாதகங்களால் அமலமடைந்து அள்ளூறாக்கையாய்ச் சூக்குமமாய் மறையமுடியாத அசுத்தபௌதிக தனுக்கள்—மருளுடம்புகள் யாதோ நிட்டையிலிருந்த பாவனையாகவே நிலத்துட் புதைக்கப்பட்டபின் அக் குழியினுள்ளே மூடப்பட்டுக் கிடந்து அள்ளூறாக்கையாய்ச் சூக்குமமாய் மறைகின்றன—ஞானவெளியாய் விடுகின்றன என்றும் கூறி நூல்களையும் எழுதி வெளியிட்டு “இதுதான் சைவம்” என்றால் இதனை யார்தாம் ஒப்புக்கொள்வர்? எள்ளி நகை யாடாதிருப்பர்? இதுதான் எல்லா வற்றிற்கும் மேலான சமயம்—தலையாய் அரசுவீற்றிருக்கும் சமயம் என்று எவ்வாறு கூறமுடியும்? ஒவ்வொரு சமயமும் தான் தான் தலையாய சமயம் என்றால் குற்றம் என்னை? ஏனைய சமயங்களெல்லாம் காயம் பிணி மூப்புக்களால் பிணமாகிக் கழிந்தக்கால் அதனைப் பிரிந்த உயிர் கடவுளை அடைந்துவிடும்—வீடடையும் எனக்கூறும். சமயகோடியெல்லாம்தனக்குஅங்கங்களாகக் கொண்டு அவற்றிற்குத் தலையாய் அரசுவீற்றிருக்கும் அரிய பெரிய சைவசமயம் ஒன்றே அநித்தியமாகிய அசுத்தம் மலிந்த — இருவினை சொரூபமாகிய காயத்தை—மருளுடம்பை அவ்வசுத்தம் நீக்கி—பாசம் நீக்கி அமலமாக்கி நித்தியத்துவம் அடைய வேண்டும் எனவும் இதுவே மீண்டு வாராநெறி—வீட்டுநெறி எனவும் முறையிடுவதாகும். சைவம் சகல மதத்தினர்க்கும் சாதியாளர்க்கும் பொதுவானது. சில மரபினர்க்கு மாத்திரம் சிரப்பாக உரிய தன்று. சைவம் ஒன்றே அநாதியாக உள்ளது. இதுவே சீவர்கள் கர்மத்துக் கேற்பப்பல மதங்களாகத் திரிந்து வழங்குகின்றது. தன் உடலை கொல்லாது “உற்ற வாக்கையின் உறுபொருள் ஆகிய” ஆசான் தரிசனம் பெற்று அவ்வுடலை சிவசம்பந்தமுடையதாக மாற்றினவன் எவனோ அவனே சைவன் ஆவன். இதுவே வேறோர் அத்தியாயமாக விரித்துக் கூறப்படும். திருவாசகம் முதலிய தத்துவப் பெரியார் பாடல்களும் வேதம் முதலிய நூல்களும் சுத்த சாதகமும் உடலும் உயிரும் ஒழிவற ஒன்றித் தோன்றிய முறையே பிரியாமல் ஒடுங்குவதே முத்திப்பேறு—மீண்டு வாரா உண்மை நெறி என நன்கு வற்புறுத்துவனவாகும். அசுத்த நிறையின் ஆதிக்கத்தால் உடல் பிணமாகி அழிந்தொழிவது—உடலைவிட்டு உயிர் பிரிவது மரணமே—பிறவி நெறியேயன்றி முத்தி நெறியன்று.

“மேல் ஒரு வடிவை எடுத்ததே யாகில்
மேவு மிவ்வுடலிங்கே வீழும்.”

என்பது பெரிய நாயகியருளால் எழுந்த சுத்த சாதகம். தமது திருவாக்காலும் அரும் பெரும்செயலாலும் உண்மைச்சைவத்தை நிலைநாட்டி நமக்கு நன்னெறிகாட்டிப்போந்த அருள்வள்ளல்களாகியசமயகுரவர்தமது உடலை அமலமாக்கி நித்தியப்படுத்தி அவ்வுடலோடு உலகு கண்டு போற்ற மறைந்தவரே என்பதும், அன்னவர் அமலத்திருமேனிகள் நிலத்துட் புதைத்து விடும்படியும் கட்டையில் வைத்துச் சுட்டு விடும்படியும் பிணமாக விடப்படவில்லை என்பது யாவரும் அறிந்த உண்மையே யாகும். இங்ஙனம் தூலத்தோடு மறைதலே சைவ சமய முத்தி என்பதனை அன்னவர் வெள்ளிடைமலைபோல விளக்கிக் காட்டியருளியும், அன்னவரையே சைவ சமய பரமாசாரியராகக்கொண்டு வழிபட்ட பிற்காலத்தவர் பலரும், வழிபடும் தற்காலத்தவரும் இதுவே உண்மைமுத்தி என உணர்ந்து ஒப்புக்கொள்ள முடியாமலோ பிறகாரணம் பற்றியோ அன்னவர் நாட்டிய உண்மைக்கு மாறாகச் செத்துப்போவதும் — உடம்பு பிணமாக உயிர் பிரிவதும் சேதனம் பின்னப்படுவதும் முத்திதான் என மயங்குவாராயினர். ஒரு சிலர்தாம்—ஒருவர் இருவர்தாம் தூலத்தோடு மறைந்து முத்தியடைந்தனர் என்பது குண்டுச்சட்டியில் குதிரை விட்டோட்டுவோர் கொள்கை. உலகம் தோன்றிய காலந்தொட்டு ஒரு சிலர் தாம் இவ்வாறு முத்தியடைந்தவராவரோ? எத்தனையோ இருடிகளும், முனிவர்களும், அறுபான் மும்மை நாயன்மாரும் பிறரும் இவ்வாறு தமது தூலத்தை அமலமாக்கி அதனோடு மறைந்து முத்தியடைந்தவரேயாவர் என்பதில் ஐயமில்லை. அமயம் நேர்ந்துழி இவ்விஷயம் விளக்கிக் கூறப்படும். உண்மைச் சாதகங்களை அநுட்டித்து அரிய பெரிய சகசநிட்டையாளராய் உலகர் போல் வாழும் மெய்யடியார் தூலமே அள்ளூறாக்கையாய் அமலமடைந்து சூக்குமமாய் உலகு கண்டிட மறைதற்கு உரியனவாகும். இவ் அரிய பெரிய நிலையை அடையும் பக்குவம் பெறாத சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர் உபாசக நிட்டையாளர் ‘ துற்றவைதுறந்த வெற்றுயிராக்கை”யராய், “வாயோடு கண்மூடி மயக்கமுற்று” எத்துணைக்காலம் கிடப்பவராயினும் — அசைவற வீற்றிருப்பவராயினும் தூலம் பிணமாகிவிழ இறந்து பிறப்பவரே யாவர். இந்நிட்டையாளர் உயிரோடு நிலத்துட் புதைக்கப்பட்டனர் — படுகின்றனர் என விளம்புவாரும் உளர். இந்நிட்டையாளரைத்தான் பிறரைத்தான் உயிரோடு நிலத்துட்புதைத்து விடும்படி எந்த நூலும் கூறாது. அறிஞர் எவரையும் உயிரோடு புதைத்துவிட முயலார். இது கொலைபாதகமே யாதலின். அமயம் நேர்ந்துழி இந்நிட்டையாளர் இயல்பு விரித்துக் கூறப்படும்.

(தொடரும்)

“வித்தகம்”

வருட சந்தா விவரம்.

முன் பணம்

இந்தியா, பர்மா, சிலோன் ரூ. 3–0–0

மலாயா, சிங்கப்பூர், சைகோன் } ரூ. 4-0–0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

Sandhanam Printing Works, Pondicherry. Le Gérant R. Nagarattinam.